முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## AA3 பரீட்சை – 2019 யூலை

## (AA35) கூட்டிணைப்பு மற்றும் தனிநபர் வரியியல்

(Corporate and Personal Taxation)

2019-07-21
பிற்பகல்
[1.45 – 5.00]

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*

*விடையெழுத : 03 மணித்தியாலம்*

பக்கங்களின் எண்ணிக்கை: 08
வினாக்களின் எண்ணிக்கை: 09

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) ***விடைகள்*** *யாவும் உமக்கு வழங்கப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும், கணிப்பீடுகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருப்பின் அவற்றை தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொல் நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் உள்ளடக்கப் பட்டுள்ள செயல் வினைச் சொல்லின் பொருள் வரையறையின் அடிப்படையில் அந்தந்த வினாக்களுக்கு விடையளிக்கப்படல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டிறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி வரிமதிப்பாண்டொன்றிற்கான ஆள் ஒருவரது வரிவிதி வருமானம் நான்கு பிரதான வருமான மூலங்களைக் கொண்டுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) உள்நாட்டிறைவரிச் சட்டத்தின்படி நான்கு (04) பிரதான வருமான மூலங்களை **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(b) உள்நாட்டிறைவரிச் சட்ட ஏற்பாடுகளின்படி "அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர்" ஆக இருக்கக்கூடிய மூன்று (03) ஆட்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

### வினா 02

***ஏருஇசட்*** சர்வதேசக் கம்பனி நியூசிலாந்தைத் தளமாகக் கொண்ட பல்தேசியக் கம்பனி ஒன்றாகும். அதற்கு இலங்கையில் ஒரு துணைநிலைக் கம்பனி (subsidiary) இருப்பதுடன் அது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டத்தின் கீழ் 2017 டிசெம்பர் 01 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியது:**

2018/19 ஆம் வரிமதிப்பாண்டு தொடர்பில் இலங்கையில் வரிவிதிப்பு நோக்கத்திற்காக அத்துணைநிலைக் கம்பனியின் வதிவு அந்தஸ்தினை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட சரசி பப்றிக்ஸ் (தனி) கம்பனி** 2019 மார்ச் மாதத்தில் பின்வரும் கொடுப்பனவுகளை மேற்கொண்டிருந்தது.

- கடை வாடகை **சில்வாவுக்கு** (வதிவுள்ள ஆளொருவர்) - ரூபா 40,000/-.
- வரி ஆலோசகர் **ராஜாவுக்கு** (வதிவுள்ள ஆளொருவர்) ஆலோசனைக் கட்டணம் - ரூபா 75,000/-.
- சுத்திகரிப்புச் சேவைக்காக **வரையறுக்கப்பட்ட ஈஸி ஹெல்த் (தனி) கம்பனிக்குச்** செலுத்தப்பட்ட கட்டணம் - ரூபா 150,000/-

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) மேலே தரப்பட்ட ஒவ்வொரு கொடுப்பனவு மீதும் நிறுத்திவைத்தல் வரி (WHT) கழிப்பதற்கான கடப்பாட்டினைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) 2019 மார்ச் மாதத்திற்கு **வரையறுக்கப்பட்ட சரசி பப்றிக்ஸ் (தனி) கம்பனியினால்** கழிக்கப்பட்ட மொத்த நிறுத்திவைத்தல் வரியினைக் **கணிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

**பெரேரா** 2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்கான தனது வருமான வரிப் பொறுப்பு ரூபா 750,000/- என மதிப்பீடு செய்திருந்தார். அவர் தனது முதலாம் மற்றும் இரண்டாம் தவணைக் கட்டணங்களாக ரூபா 300,000/- செலுத்தியிருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) மூன்றாவது தவணைக் கட்டணமாகச் செலுத்த வேண்டிய வருமான வரித் தொகையினைக் **கணிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) மூன்றாவது தவணைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டிய திகதியினைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# <u>பகுதி B</u>

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**பீஎன் சகோதரர்கள்** என்பது **பிரவீன்** மற்றும் **நிசான்** சகோதரர்களால் உருவாக்கப்பட்ட பங்குடமை ஒன்றாகும். அது எழுதுபொருட்களை (Stationary) மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. பங்குடமை உடன்படிக்கையின்படி **பிரவீனும் நிசானும்** இலாப, நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்து கொள்வதற்கு உடன்பட்டிருந்தனர்.

2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றின்படி, பங்குடமையின் விற்பனை மற்றும் நிகர இலாபம் என்பன முறையே ரூபா 54,350,000/- மற்றும் ரூபா 12,100,000/- ஆகும்.

(1) நிகர இலாபமானது பின்வரும் செலவுகளைக் கழித்த பின்பு பெறப்பட்டிருந்தது:

| | ரூபா |
|---|---|
| பங்காளருக்குச் செலுத்தப்பட்ட சம்பளங்கள் | 2,640,000 |
| அலுவலக ஊழியர்களுக்கான சம்பளங்கள் | 3,950,000 |
| சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு | 190,000 |

(2) **பிரவீனும் நிசானும்** வியாபாரத்தில் கொண்டிருந்த ஈடுபாட்டிற்காக மாதாந்தச் சம்பளமாக முறையே ரூபா 120,000/- மற்றும் ரூபா 100,000/- பெற்றுக் கொண்டனர்.

(3) 2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்கு சொத்துக்கள் மீது வரி நோக்கத்திற்கான மூலதன விடுதொகை ரூபா 175,000/- ஆகும்.

***நீங்கள் செய்யவேண்டியவை:***

பின்வருவனவற்றைக் **கணிப்பிடுக**:

(a) வரி நோக்கத்திற்காக 2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்கான பங்குடமை வருமானம் (03 புள்ளிகள்)

(b) 2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்கு பங்குடமை செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தல் வரி (02 புள்ளிகள்)

(c) 2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்கு ஒவ்வொரு பங்காளரதும் பங்குடமை வருமானத்தின் பங்கு (03 புள்ளிகள்)

(d) 2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்கு ஒவ்வொரு பங்காளருக்கும் உரித்தான நிறுத்தி வைத்தல் வரி வரவு (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட றன்சலு என்ரபிரைசஸ் (தனி) கம்பனி** கைத்தறிச் சேலைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. அத்துடன் அது உள்ளூர் வழங்குநர்களிடம் இருந்து கையால் செய்யப்பட்ட வீட்டு உபயோகப் பொருட்களைக் (Handloom household items) கொள்வனவு செய்து தனது காட்சியறைகளில் விற்பனைசெய்து வருகிறது.

**வரையறுக்கப்பட்ட றன்சலு என்ரபிரைசஸ் (தனி) கம்பனியின்** கணக்கேடுகளிலிருந்து 2018 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டன:

(1) கம்பனியின் விற்பனைகள்:

| | **ரூபா** |
|---|---|
| கம்பனியால் உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறிச் சேலைகளின் விற்பனை | 8,340,000 |
| கம்பனியால் உள்ளூரில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் விற்பனை | 5,340,000 |
| **மொத்தம்** | **13,680,000** |

(2) பழைய தையல் இயந்திரமொன்றின் விற்பனையிலிருந்து கம்பனி பெற்றுக்கொண்ட தொகை ரூபா 500,000/- .

(3) கம்பனி செலுத்திய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (தே.க.வ.) (NBT) பின்வருமாறு:

| | **ரூபா** |
|---|---|
| உற்பத்திச் செயன்முறையில் பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்களின் இறக்குமதியின் மீது | 126,000 |
| வீட்டு உபயோகப் பொருட்களின் உள்ளூர் கொள்வனவின் மீது | 65,000 |

(4) 2018 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காக மாதாந்தக் கட்டணங்களாக செலுத்தப்பட்ட தே.க.வ. தொகை ரூபா 50,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) 2018 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காகச் செலுத்த வேண்டிய மீதி தே.க.வ. தொகையை **மதிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(b) 2018 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான தே.க.வ. திரட்டினைச் சமர்ப்பிப்பதற்குரிய திகதியைக் **குறிப்பிடுக.** (01 புள்ளி)

(c) 2018 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்குச் செலுத்தப்பட வேண்டிய பொருளாதார சேவைகள் கட்டணத்தை (ESC) **மதிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

**வரையறுக்கப்பட்ட சமனல கிறியேஷன்ஸ் (தனி) கம்பனி** உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாடிக்கைளாளர்களுக்காகப் பைகளை (bags) உற்பத்தி செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள பெறுமதி சேர் வரிக்கு (பெ.சே.வ.) பதிவு செய்யப்பட்ட கம்பனியொன்றாகும். 2018 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காக கம்பனியின் கணக்கேடுகளிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன:

(1) விற்பனை விபரங்கள் (பெ.சே.வ. தவிர்த்து):

| | **ரூபா** |
|---|---|
| உள்ளூர்ச் சந்தைக்கான விற்பனைகள் | 6,084,000 |
| ஏற்றுமதியாளர்களுக்கான விற்பனைகள் - SVAT திட்டத்தின் கீழ் | 1,716,000 |
| | **7,800,000** |

(2) காலாண்டுப் பகுதியில் கம்பனி பின்வரும் உள்ளீட்டு பெ.சே. வரிகளைச் செலுத்தியிருந்தது:

| | **ரூபா** |
|---|---|
| மூலப்பொருட்களின் கொள்வனவின் மீது | 843,000 |
| பிரதம நிறைவேற்று அதிகாரியினால் (CEO) பயன்படுத்தப்பட்ட மோட்டார் காரின் திருத்தங்களின் மீது | 24,000 |
| | **867,000** |

(3) காலப்பகுதிக்குரிய ரூபா 257,400/- தொகைக்கான எல்லா இலகுபடுத்தப்பட்ட VAT வரி வரவு வவுச்சர்களையும் கம்பனி சேகரித்திருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) 2018 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்குச் செலுத்த வேண்டிய / (மேலதிகமாகச் செலுத்திய) மீதிப் பெறுமதிசேர் வரியை **மதிப்பிடுக.** (07 புள்ளிகள்)

(b) பெறுமதிசேர் வரிச் சட்டத்தின்படி வரிப் பற்றுச்சீட்டொன்றில் (tax invoice) உள்ளடக்கப்பட வேண்டிய மூன்று (03) விடயங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

இரண்டு (02) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

**வரையறுக்கப்பட்ட சகஸ்ரா இன்ரநெஷனல் (தனி) கம்பனி (SIL)**, 2016 ஏப்ரல் 01 ஆம் திகதி கம்பனிச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டதுடன் அதன் நடவடிக்கைகளையும் அன்றைய தினத்திலேயே ஆரம்பித்தது. அது கட்டடப் பொருட்களை இறக்குமதி செய்து உள்ளூர்ச் சந்தையில் விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட சகஸ்ரா இன்ரநெஷனல் (தனி) கம்பனியின்** நிதிக் கூற்றுக்களிலிருந்து பின்வரும் தகவல்கள் பிரித்தெடுக்கப் பட்டுள்ளன.

(1) 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சுருக்கப்பட்ட வருமானக் கூற்று பின்வருமாறு:

| | ரூபா |
|---|---|
| புரள்வு | 565,750,000 |
| விற்பனைக் கிரயம் | (339,450,000) |
| **மொத்த இலாபம்** | **226,300,000** |
| ஏனைய வருமானம்: | |
| நிலையான வைப்பிலிருந்து வட்டி வருமானம் - மொத்தம் | 350,000 |
| பெற்ற பங்கிலாபம் - நிகர | 122,980 |
| விநியோக வான் விற்பனை மீதான இலாபம் | 84,000 |
| | 226,856,980 |
| நிருவாகச் செலவுகள் | (114,500,000) |
| விநியோகச் செலவுகள் | (43,650,000) |
| நிதிச் செலவுகள் | (4,350,000) |
| **வருமான வரிக்கு முந்திய இலாபம்** | **64,356,980** |

(2) நிருவாகச் செலவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:

- ஆண்டிற்காகத் தாக்கல் செய்யப்பட்ட பெறுமானத்தேய்வு ரூபா 4,876,000/-.
- ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூபா 764,000/- ஆவதுடன் ஆண்டுக் காலப்பகுதியில் பணிக்கொடைக் கொடுப்பனவு எதுவும் செய்யப்படவில்லை.
- அபி வெனுவென் அபி (நமக்காக நாம்) நிதியத்திற்காக கம்பனியால் வழங்கப்பட்ட நன்கொடை ரூபா 1,000,000/-.
- வர்த்தக அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதில் ஏற்பட்ட தாமதத்திற்காக பிரதேச சபைக்குச் செலுத்தப்பட்ட தண்டம் ரூபா 53,500/-.
- பிரதம நிறைவேற்று அதிகாரியும் அவரது குடும்பத்தினரும் உல்லாசம் அனுபவிப்பதற்கான வெளிநாட்டுச் சுற்றுலா ஒன்றின்மீது கம்பனிக்கு ஏற்பட்ட செலவு ரூபா 800,000/-.

(3) விநியோகச் செலவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:

- களியாட்டச் செலவுகள் ரூபா 225,000/- ஆவதுடன் அது வியாபாரப் பேச்சுவார்த்தைக்காக வருகைதந்த வாடிக்கையாளர்களை மகிழ்விப்பதற்காக ஏற்பட்ட செலவாகும்.
- உள்ளூர் ஊடகங்களிலான விளம்பரச் செலவு ரூபா 675,000/- ஆவதுடன் கணக்காளரை ஆட்சேர்ப்பதற்கான பத்திரிகை விளம்பரச் செலவு ரூபா 50,000/- ஆகும்.
- வங்குரோத்துக் காரணமாக வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 250,000/- வை கம்பனி பதிவழித்ததுடன் கடன்பட்டோரிடமிருந்தான மீதியாக இருந்த ஐயக் கடன்கள் மீது ரூபா 500,000/- பொது ஏற்பாடு செய்யப்பட்டது.

(4) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் விபரங்கள் பின்வருமாறு:

**கிரயம்**

| சொத்துக்கள் | 2018 ஏப்ரல் 01 இல் மீதி (ரூபா) | சேர்த்தல்கள் (ரூபா) | விற்பனைகள் (ரூபா) | 2019 மார்ச் 31 இல் மீதி (ரூபா) |
|---|---|---|---|---|
| இயந்திரங்கள் | 2,475,000 | 1,200,000 | - | 3,675,000 |
| மோட்டார் வாகனங்கள் | 5,675,000 | 4,000,000 | 2,400,000 | 7,275,000 |
| அலுவலக உபகரணங்கள் | 477,000 | - | - | 477,000 |
| கணினிகள் | 265,000 | 435,000 | - | 700,000 |
| **மொத்தம்** | **8,892,000** | **5,635,000** | **2,400,000** | **12,127,000** |

- 2019 சனவரி 01 ஆந் திகதி விநியோக வான் ஒன்று ரூபா 1,200,000/- க்கு விற்பனை செய்யப்பட்டது. விற்பனை செய்யப்பட்ட வாகனத்தைப் பிரதியீடு செய்வதற்காக 2019 சனவரி 10 இல் கம்பனி ரூபா 4,000,000/- க்கு புதிய லொறியொன்றைக் கொள்வனவு செய்தது.
- மோட்டார் வாகனங்களின் மீதி பிரதம நிறைவேற்று அதிகாரியினால் பாவிக்கப்படும் கார் ஒன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.
- 2018 ஏப்ரல் 01 இல் இருந்தவாறான சொத்துக்கள் அனைத்தும் கம்பனி கூட்டிணைக்கப்பட்ட நேரத்தில் கொள்வனவு செய்யப்பட்டவையாகும்.

(5) 2017/18 ஆம் வரிமதிப்பாண்டிலிருந்து கம்பனியின் வியாபாரத்திலிருந்தான முன்கொண்டுவரப்பட்ட வரிவிதி நட்டம் (taxable loss) ரூபா 5,678,000/- ஆகும்.

(6) 2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்கான பொருளாதார சேவைகள் கட்டணக் (ESC) கொடுப்பனவு ரூபா 2,828,750/-.

(7) 2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்கு கம்பனி ரூபா 8,000,000/- இனை வருமான வரிக் காலாண்டுத் தவணைக் கட்டணங்களாகச் செலுத்தியிருந்தது.

(8) நிலையான வைப்பு வட்டியின் மீது உரிய வீதத்தில் வங்கியினால் நிறுத்திவைத்தல் வரி கழிக்கப்பட்டிருந்தது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்கு பின்வருவனவற்றை **மதிப்பிடுக**:

(a) வரிமதிக்கத்தக்க வருமானம்

(b) வரிவிதி வருமானம்

(c) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(d) செலுத்த வேண்டிய மீதி வரி

**மு.கு.:** ஏதேனும் செலவுகளை அனுமதிப்பதற்கான அல்லது அனுமதிக்காது விடுவதற்கான காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். (25 புள்ளிகள்)

## வினா 09

உயர் தொழிற்றகைமையால் சட்டத்தரணி ஒருவரான **சரளா,** முன்னணி வங்கியொன்றில் சட்ட அலுவலராக கடமையாற்றுகின்றார். 2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்கு (இதன் பின்பு ஆண்டு எனக் குறிப்பிடப்படும்) **சரளா** தொடர்பான பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன:

(1) ஆண்டுக் காலப்பகுதியில் அவர் வங்கியிலிருந்து பின்வருவனவற்றைப் பெற்றுக்கொண்டார்:

- மொத்தச் சம்பளம் - மாதாந்தம் ரூபா 200,000/-
- பிரயாணப் படி – மாதாந்தம் ரூபா 35,000/-
- 2018 டிசெம்பரில் பெற்றுக்கொண்ட ஒரு மாத ஊக்குவிப்புத் தொகை - ரூபா 200,000/-.
- அவர் தொழில்கொள்பவரால் வாடகையின்றி வழங்கப்பட்ட வீடொன்றில் வசித்து வருகின்றார். தொழில்கொள்பவர் வீட்டுரிமையாளருக்கு மாதாந்த வாடகையாக ரூபா 50,000/- செலுத்தினார். வீட்டின் சோலைவரி மதிப்பீடு ரூபா 1,200,000/- ஆகும்.
- ஆண்டிற்கான அவரது தொலைபேசிக் கட்டணத் தொகையான ரூபா 64,000/- கம்பனியினால் அவருக்கு மீளச் செலுத்தப்பட்டது.
- வங்கியில் அவரது 10 ஆம் ஆண்டுச் சேவை நிறைவு நாளில் ரூபா 100,000/- அன்பளிப்பினைப் பெற்றுக்கொண்டார்.
- ஊழியர் சேமலாப நிதியம் (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) என்பவற்றிற்கு தொழில்கொள்பவரால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பு முறையே மொத்தச் சம்பளத்தில் 12 % மற்றும் 3 % ஆகும்.

(2) ஆண்டுக் காலப்பகுதியில் **சரளா** பின்வரும் வட்டி வருமானங்களைப் பெற்றுக்கொண்டார்:

- நிலையான வைப்பொன்றிலிருந்து ரூபா 243,750/- (நி.வை.வ. கழித்த நிகரத் தொகை).
- நண்பர் ஒருவருக்குக் கொடுத்த கடன் ஒன்றின் மீது - ரூபா 100,000/-.

(3) **சரளாவுக்கு** இரத்தினபுரியில் ரூபா 250,000/- சோலைவரி மதிப்பீடு செய்யப்பட்ட வீடொன்று உள்ளது. இந்த வீடு மாதாந்தம் ரூபா 45,000/- க்கு வாடகைக்கு விடப்பட்டது. சோலைவரி 25 % இல் செலுத்தப்பட்டது.

(4) கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட சில கம்பனிகளின் பங்குகளில் அவர் முதலீடு செய்திருந்தார். ஆண்டுக் காலப்பகுதியில் அவர் ரூபா 43,000/- நிகரப் பங்கிலாப வருமானத்தைப் பெற்றுக்கொண்டார்.

(5) ஆண்டுக் காலப்பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக இடர் முகாமைத்துவ அமைச்சுக்கு ரூபா 100,000/- பெறுமதியான பொருட்களை நன்கொடையாக வழங்கியிருந்தார்.

(6) 2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்கு வருமானவரிக் காலாண்டுத் தவணைக் கட்டணங்களாக **சரளா** செலுத்திய தொகை ரூபா 50,000/- ஆகும்.

(7) ஆண்டிற்கான உ.போ.செ. (PAYE) கழிப்பனவு ரூபா 190,720/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

2018/19 ஆம் வரிமதிப்பாண்டிற்கு **சரளாவிற்கு** பின்வருவனவற்றை **மதிப்பிடுக**:

(a) வரிவிதி வருமானம்

(b) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(c) செலுத்த வேண்டிய மீதி வரி

(d) வரிவிலக்கு வருமானம், ஏதாவது இருப்பின் (25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |